# பத்தாண்டு காலப் பதிவுகள்
# 1992-2002



# இராமாயணம்
## (நாட்டிய நாடகம்)

யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை

*With Best Compliments from :-*

NTN

*Power to Move the World.*

## CONSOLIDATED BEARINGS & SUPPLY LTD.

No. 29/1, Bristol Street, Colombo 01.
Tel No. 448165, 448317
Fax : 335865
E-mail : cbscol@eureka.lk

**Agents for :**

- NTN Ball & Roller Bearings
- NTN Plummer Block Bearings
- NTN Solid Grease Bearings
- NTN Parts Feeders.
- NTN Pillow Block Bearings
- NTN Plain Bearings & Rod Ends
- NTN Precision Ball Screws

**Branch :**

No. 474, Peradeniya Road, Kandy.
Tel : 074-470195, 08-236409 & 08-201148.
Fax : 08-201148

# கல்லூரிக் கீதம்

பல்லவி

வாழ்கவே வளர்க வாழ்கவே—வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

சரணம்

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்.
(வாழ்கவே)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாகத்
திறன்பணி கண்டிடுவோம்
(வாழ்கவே)

வர்த்தக இயலும் தொழில்முறை கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நந்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றறை கூறிடுவோம்.
(வாழ்கவே)

*With Best Compliments of*

SUMITOMO TIRES

# V. R. Vadivetkarasan

**SOLE AGENTS FOR SUMITOMO TYRES**

*(Manufactured in Japan)*

271, Sea Street,
Colombo 11.

# மலர் ஆசிரியரின் பக்கம்

## நிழலாடும் நினைவுகள்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் செயலாளர் என்ற வகையிலும், இக்கிளைச் சங்கத்தின் பத்தாண்டு நிறைவினை முன்னிட்டு (1992–2002) இப்பொழுது வெளியிடப்படும் இம்மலரின் ஆசிரியர் என்ற முறையிலும், அதற்கும் மேலாக கரவெட்டியைச் சூழவுள்ள கரணவாய் என்ற கிராமத்திலிருந்து நீண்ட நெடும் விளைச்சல் நிரம்பிய வயல்களினூடே அவ்வயல் வெளிகளிலிருந்து வந்த காற்றின் சுகந்தத்தை அனுபவித்தவாறு வரம்புகளில் நடந்து சென்று விக்னேஸ்வராவில் பெற்ற கல்விப் புலமை காரணமாக மக்கள் மத்தியில் ஓரளவு தெரியப்பட்டவன் என்பதனாலும் இந்தக் குறிப்பினை எழுதுகின்றேன். "வீரகேசரி" யில் உதவி ஆசிரியராகி பின்னர் தேசியமயமாக்கப்பட்ட காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் மொழிபெயர்ப்பாளனாகி தொடர்ந்து அங்கு ஆளணி முகாமைத்துவ நிர்வாகியாகி, ஏக காலத்தில் இலங்கை வானொலியில் பகுதி நேர அடிப்படையில் பிரதி எழுதுதல், அறிவிப்புச் செய்தல், செய்தியை மொழிபெயர்த்து வாசித்தல், நிகழ்ச்சி தயாரித்தல் போன்ற பல தரப்பட்ட பணிகளை ஆற்றி, பின்னர் அங்கு முழுமையாக, நிரந்தரமாக, தரித்துக் கொண்டு, உதவி நிர்வாகப் பணிப்பாளர், தமிழ்ச் சேவைப் பணிப்பாளர், முடிவில் பிரதிப் பணிப்பாளர் நாயகமாகி உயர்ந்து நிற்கமுடிந்த தென்றால், அது விக்னேஸ்வரா எனக்குக் காட்டித்தந்த வழி, வகுத்துத் தந்த பாதை, ஊட்டிவிட்ட தெம்பு என்றுதான் சொல்வேன். இதன் பின்புலமே நிழலாடும் (என்) நினைவுகளாகின்றன.


நான் சார்ந்த கரணவாய் எனும் கிராமம் பற்றியும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகின்றது. விக்னேஸ்வரா, கரவெட்டியைச் சூழவுள்ள கிராமங்களுக்கும் மையமாக விளங்கி வந்ததால், கரவெட்டியின் வரலாற்றோடு அந்த கிராமங்களின் வரலாறும் எழுதப்பட வேண்டும் என்ற ஆதங்கம் மேலோங்கி வருவதாலும் கரணவாய் பற்றிய சில குறிப்புகளை இங்கு பதிவு செய்தல் பிற்கால ஆய்வாளர்களுக்கு உதவியாக அமையலாம்.

பருத்தித்துறை → நெல்லியடி → சாவகச்சேரி வீதியின் 5ம் மைல் கல்லின் வடக்கும் தெற்குமாக அமைந்துள்ள பெரியபகுதி கரணவாய் எனப்படும். இப் பெயர் கருணீகருடன் தொடர்பு கொண்டதாகும். "கருணீகர் வாயில்" என்ற இடமே மருவி கரணவாய் என வழங்கிற்று. இவ்விவரத்தைத் தரும் கலாநிதி இ. பாலசுந்தரம் தமது இலங்கை இடப் பெயர் ஆய்வில் மேலும் இவ்வாறு கூறுகிறார் – "கரணவாய் என்பது கருணைவாய் என்பதன் சிதைவாகவும் இருத்தல் கூடும். கருணை (ஒருவகைக் கிழங்குச் செடி) என்பது வழக்கிலே கரணை அல்லது கறணை எனத் திரிதலுண்டு, இவ்வூர்ப் பெயரைக் கருணையம்பதி, கருணையூர் எனவும் வழங்குவர்". இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழச் சேவையில் கட்டுப்பாட்டாளராக விருந்த காலஞ்சென்ற எனது தமையனார் வீ. ஏ. சிவஞானம், சித்தப்பா வே. வெற்றிவேலு மற்றும் உறவினர்கள் எஸ். மாசிலாமணி, எம். சிவபாதசுந்தரம் உட்பட இக்கிராமத்து மாணாக்கர்கள் பலர் விக்னேஸ்வராவின் நிழலில் வளர்ந்து அதனால் பயனடைந்து பெருமை பெற்றதனைச் சுட்டிக் காட்டவே இவற்றை இங்கு குறிப்பிட வேண்டியதாயிற்று.

எமது கிளைச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவுற்ற இந்நிலையில் மேலும் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். கிளைச் சங்கச் செயலாளராக பணிபுரிந்து வந்த திரு. வே. கந்தசாமி அவர்கள், சொந்தக் காரணங்களை முன்னிட்டு ஆண்டின் ஆரம்பத்தில் விலகியதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு செயற்குழுவினர் என்னைத் தெரிவு செய்தனர். அவர்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்கு நியாயமாக நடந்துள்ளேன் என்றே கருதுகின்றேன். இக் குறுகிய காலப்பகுதியில் பேராசிரியருக்கு பாராட்டு விழா, திரு. சிவசிதம்பரம் அவர்களுக்கு வரவேற்பு விழா, அவருக்கு அஞ்சலிக் கூட்டம், இன்று பத்தாண்டு நிறைவை முன்னிட்டு இராமாயண நாடக அரங்கேற்றம், இப்படி நான்கு நிகழ்ச்சிகளில் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்புத்தந்த சிறந்த வழிகாட்டியான தலைவரையும் ஏனைய உறுப்பினர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றி உணர்வுடன் நினைத்துப்பார்க்கிறேன். அத்துடன், விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் நாடாளுமன்றத்தில் நண்பர் திரு. வி. தில்லைநாதன் (இலங்கை வங்கி) அமைத்த அமைச்சரவையில் கலாசார, சமய விவகார அமைச்சராகப் பணியாற்றி, வைபவங்களும், விழாக்களும் நிகழ்ச்சிகள் பலவும் நடத்திய அந்த பசுமை நிறைந்த நினைவுகள் என்னை நிழல்போல் இன்றும் தொடருவது ஒரு சுகானுபவமே!

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்" - (குறள் 505).**

இனி, "பத்தாண்டு காலப் பதிவுகள்" நினைவு மலரைப் புரட்டுங்கள்......



– வீ. ஏ. திருஞானசுந்தரம்
2002.08.10

*With Compliments From :*

# AMITY

RECREATION & SHOPPING

123, High Level Road,

Maharagama.

Tel : 074 307937

# RAMAKRISHNA MISSION

(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

Phone : 588253
075-513805
Fax : 588253




## MESSAGE

We are glad to learn that the Colombo Branch of the Old Students' Association of the J/Karaveddy Vigneswara College, are going to stage a Ballet (Dance Drama) on Ramayanam, at the Ramakrishna Hall, on Saturday the 10th August, 2002 to commemorate the 10th Anniversary of their Association.

A school is a place of worship. The knowledge and training imparted there is sacred, since it helps the child to unfold progressively the divinity hidden within him or her, in the form of love, courage, self confidence, creativity etc., which contribute to the making and fulfilment of life. It is hence quite fitting for the old students to feel proud of their school and express their gratitude for the contributions it has made to the joy and prosperity of their lives.

The J/Karaveddy Vigneswara College is a leading school in Vadamaradchy, which has given to the country many scholars and leaders. It is gratifying to note that the school is actively promoting the religious values and traditions of our glorious past. The past students of this school, some of whom are amongst us today, feel very much proud of the training they received in English Education and moral discipline which have elevated them to limelight in the society today. It is really praise worthy of the old students of this school to extend their whole hearted support to the growth and maintanence of their beloved school.

On this happy occasion, we extend our hearty congratualtions and best wishes to the Alumni,and wish the Ballet all success!

30.7.2002

- SWAMI ATMAGHANANANDA

*With the compliments from:-*

# HOTEL VEGELANDS

No. 11, Upatissa Road,
Bambalapitiya, Colombo 4. Sri Lanka.
Tel : 582727, 592827, 591326
Fax : 551292
E-mail : krinath@slt.lk

உ

# அகில இலங்கைக் கம்பன் கழகம்

'கம்பன் கோட்டம்', 300, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



## மண்ணின் மைந்தர்கள்

உலக வரைபடத்தில் ஒரு புள்ளியாய்த் தெரியினும்,
இலங்கை,
இந்து சமுத்திரத்தின் முத்தெனப்படுகிறது.
அவ் எழில் மிகு இலங்கையின்,
சிரசாய் அமைந்தது யாழ்ப்பாணம்,
சிரசாய் அமைந்த சிறப்பினால்
கற்றோரின் உற்பத்தி நிலையமாய் அமைந்து
அது உயர்வு பெற்றது,
யாழ்ப்பாணத்தின் அறிவுச் சிறப்புக்கு
அடையாளமாய்த் திகழ்வது கரவெட்டியூர்
பல துறையிலும் புலமை சார்ந்த பெருமக்கள்
அம் மண்ணின் மைந்தர்களாய்த் திகழ்கின்றனர்.
அங்ஙனம் உயர்வுற்ற அறிஞர் பலரையும்
உருவாக்கிய பெருமை
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கேயுரிய
தனிப் பெருமையாம்.
யாழ் மண்ணில் விளைந்த போரினால்
அம்மண்ணுக்கேயுரிய விழுமியங்கள் பல சிதைக்கப்பட்டன.
தாய் மண்ணைப் பிரிந்து
ஏதிலிகளாய் எங்கெங்கோ செல்லும் அவலநிலைக்கு
மக்கள் ஆளாக்கப்பட்டனர்.
அங்ஙனமாய்,
தம் தனிவாழ்வு தாழ்வுற்ற போதும்
தாம் வாழ்ந்த மண்ணை மறக்காத மாண்பு
தமிழர் மத்தியில் இன்றும் நிலைக்கிறது.
அந் நிலைத்தலின் ஒரு சான்றாய்
கொழும்பில் இயங்கும்
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கிளை
திகழ்கிறது என்றால் அதில் மிகையில்லை.
தம் மண்ணினதும் கல்லூரியினதும் மாண்பினை
உயர்த்தி நிற்கும்,
அவ்வுயரிய சங்கம்
பத்தாண்டு நிறைவு காண்பதையிட்டு
பெரிதும் மகிழ்கிறேன்.
அவர்தம் முயற்சியும், செயற்பாடும்
மென் மேலும் சிறக்க
எனை வாழ்விக்கும் கம்ப நாட்டான் திருவடிபணிந்து
வாழ்த்துகின்றேன்.
"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"
அன்பன்,

இ. ஜெயராஜ்

*With best compliments from :-*

# Western Jewellers

**Jewellers & Gem Merchants**



88, Sea Street,

Colombo 11.

Tel : 433977, 335682

# அதிபரின் ஆசிச் செய்தி

அயல் கிராமம் ஒன்றில் பணியாற்றிவிட்டு, மிகச் சமீபத்தில்தான் விக்னேஸ்வராக் கல்லூரியில் பதவியேற்றேன். இது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருதுகின்றேன். விக்னேஸ்வரா ஓர் ஆலவிருட்சம், இங்கு கல்வி பயின்றோர், அதன் பெருமையை நிலைநாட்டி வருகின்றனர் என்பதை வெளியிலிருந்து அவதானித்து வந்துள்ளேன்.

எனக்கு முன்னர் அதிபர்களாக இருந்தவர்கள் ஆற்றிய நற்பணிகளை, அர்ப்பணிப்புச் சிந்தையுடனும், செயலூக்கத்துடனும் செய்த தியாகங்களை மனதிலிறுத்தி என்னாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வேன், அதற்கு இறைவன் ஆசிகள் என்றும் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

என் பணிகளை இலகுவாக்குவதற்கு ஏற்ற வகையில் கரவெட்டியிலும், கொழும்பிலும் நிறுவனரீதியாக இயங்கிவரும் விக்னேஸ்வராவின் பழைய மாணவர்கள் எனக்கு உறுதுணையாக விளங்குவார்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை. கொழும்புக்கிளை தனது பத்தாண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் அயரா உழைப்பினை தமது மூலதனமாகக் கொண்டு இராமயணம் நாட்டிய நாடகத்தை மேடையேற்றி, அதன் மூலம் விக்னேஸ்வராவின் வளர்ச்சிக்கு உதவ முன்வந்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

**வேலுப்பிள்ளை சிவசிதம்பரம்**<br>
அதிபர்<br>
விக்னேஸ்வராகல்லூரி<br>
யா/கரவெட்டி

*2002.08.02*

*With Best wishes of :*

PMRS



# Professional Manpower Recruiting Services (Pvt) Ltd.

***Overseas Manpower Consultants***

LABOUR LICENCE NO. 1382

No. 529, Galle Road, Colombo 6.
Sri Lanka.
E-mail : pmrs@itmin.com
Tel : 0094-1-589141, 589411, 074-516357
Fax : 0094-1-597945, 589411
Mobile : 0094-71-752877

# GREETINGS FROM
## *NATYAKALANIDHI*
# KARTHIGA KANESAR

I am delighted to hear from my sister Usha, that she is to stage *"Ramayanam"*, again for the upliftment of Vigneswara College, Karaveddy.

Yes, *"Ramayanam"* choreographed by me and staged several times in Sri Lanka, India and Australia is being now produced and staged by Mrs. Usha Sittampalanathan, a creative dance teacher in Colombo. In the first performance of *"Ramayanam"* three decades ago, it was Usha, who took the role of Ravana, and performed wonderfully well and did justice to that mighty king. In another occasion Usha was Rama.

It was the wish of all those who took the role of Ravana later, to reach the level of Usha's portrayal.

Now, I understand that Usha's daughters Sangeetha and Lavanya are to take the roles of Ravana and Rama, and I am sure that they will emerge as second to none in their respective roles.

I wish to express my greetings and best wishes to the dancers and all those involved with this project. Let us hold high the great banner of the Vazhuoor tradition!.

**Karthiga Kanesar**
4, Albion Place,
Baulkham Hills,
New 2145,
Australia.
15th July 2002.

*With Best Compliments From :*

# S.P. SAHUL HAMEED & BRO.

Dealers in Essence, Food Colours, Vegetable Oil, Margarine
Bakers Yeast, Dates & Cake Ingredients etc.

244, Bankshall Street, Colombo 11.
Tel : 325529

House of Essences

REDSTAR DENOFA EDIBLE FAT Norway KING'S HERDSMAN Danial

*With Best Compliments From :*

# RAJKO INN

உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கு மகிச்சிறந்த விடுதி

# ராஜ்கோ இன்

வாகன தரிப்பிட வசதி உண்டு

தொடர்பு :
கரவெட்டியில்
தி. நித்தியானந்தன்
சூரியவாசா
கரவெட்டி.

Colombo :
27, Fareed Place,
Bambalapitiya,
Colombo 4.
T.P : 554065,
554066.

# கார்த்திகாவின் அடிச்சுவட்டில்...............!

- உஷா சிற்றம்பலநாதன்

நாட்டிய நாடகத் தயாரிப்பில் ஒரு புதிய அத்தியாயத்தை **"இராமாயணம்"** நாட்டிய நாடகம் மூலமாகத் தோற்றுவித்தவர் எனது சகோதரி திருமதி கார்த்திகா கணேசர். அதைத் தொடர்ந்து அவர் தயாரித்த அனைத்து நாட்டிய நாடகங்களுமே தனி முத்திரை பதித்து நின்றன. பல அரங்குகள் கண்டன. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, அமரர் பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் சி. மௌனகுரு போன்ற கலா விமர்சகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றன.

இராமாயணம் நாட்டிய நாடகத்தில் முக்கிய பாகங்களை ஏற்றவர்களான நான் மற்றும் திருமதி ஆனந்தராணி பாலேந்திரா (அவைக்காற்றுக் கழகம் - லண்டன்) ஆகியோர் எனது சகோதரியின் கார்த்திகா "ஆடற் கலையகம்" என்னும் பாசறையில் பயிற்றப்பட்டதால் போலும் நாட்டிய நாடகங்களை சிறப்பாக நெறியாள்கை செய்யும் ஆற்றல் எமக்கு அமைந்தது என எண்ணுகிறேன். நாட்டியத்தைப் பயிற்றுவித்ததுடன் மாணவியருக்கு தனது ஆராய்ச்சிக் கட்டுரைகள், மற்றும் நாட்டியம் சம்பந்தமான அவரின் நூல்கள் என்பனவும் நாட்டியம் பற்றிய அறிவையும் ஊட்டின. (1) தமிழர் வளர்த்த ஆடற்கலைகள் (2) காலம் தோறும் நாட்டியக்கலை (3) இந்திய நாட்டியத்தில் திராவிட மரபு (4) நாட்டியக் கலையில் புதிய அலைகள் என்னும் நூல்கள் இன்று நாட்டியம் பயிலும் மாணவியருக்கு சிறந்த துணை நூல்களாக அமைகின்றன.

இன்று இராமாயணம் நாட்டிய நாடகத்தை எனது கணவர் கல்வி கற்ற சிறப்புமிகு கல்விக் கழகமான விக்னேஸ்வரா கல்லூரியின் ஒரு சிறந்த பணிக்காக நெறியாள்கை செய்து வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் எனது பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றேன். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வட பிராந்திய கூட்டுறவாளர் சம்மேளனத்தின் நிதி உதவிக்காக மூன்று நாட்கள் எனது சகோதரியின் தயாரிப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. முதலாம், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளாக முறையே இராமாயணம், கிருஷ்ண லீலா நாட்டிய நாடகங்கள் இடம் பெற்றன. எனது மாமனார் அமரர் செல்லையா அவர்கள் எமது நிகழ்ச்சிக்கு வருகிறார் என அறிந்ததும் எனது தசரத, இராவண, கண்ணன் வேடங்களை எப்படி ஏற்பாரோ என ஒரு வித பதற்ற நிலையில் இருந்தேன். ஆனால் அவரோ நிகழ்ச்சி முடிந்த உடன் என்னை அழைத்து எனது பங்களிப்பைப் பாராட்டியதுடன் மூன்றாம் நாள் எனது சகோதரி திருமதி கார்த்திகா கணேசரின் பரதநாட்டியக் கச்சேரிக்கு நான் நட்டுவாங்கம் செய்ததனையும் மிகவும் வியந்து பாராட்டினார். அன்னாரின் கலா ரசனையும், ஆசீர்வாதமும் இணைந்து அவரின் பேரர்களான Seagull Property Developers நிறுவனத்தினரான திரு. ந. சுரேந்திரன் திரு. ந. வாகீசன் ஆகியோர் பிரதம அனுசரணையாளராகக் கொண்டு பேரன் சி. காண்டீபனின் ஒளிப்பிரதி அமைப்பில் அவரின் பேத்திகளான சங்கீதா (தசரதன், இராவணன்), லாவண்யா (இராமர்), சிவதர்மினி (இலக்ஷ்மணன்), துஷாந்தி (சீதை) ஆகியோர் பங்காற்ற இன்று இராமாயணம் மேடையேற்றும் பேறு எனக்குக் கிடைத்தது.

இச் சந்தர்ப்பத்தில் இந் நிகழ்ச்சியை சிறப்புற நடாத்தும் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கும் குறிப்பாக இச் சந்தர்ப்பத்தில் எமக்கு மிக்க உறுதுணையாக நிற்கும் திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் அவர்களுக்கும் மிகுந்த நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இந் நிகழ்ச்சி சிறப்புற அமைய எல்லாம் வல்ல கூத்தபிரான் துணை வேண்டி நிற்கிறேன்.

*With Compliments from :*



# AIRLINE TRADERS

**DEALERS IN BEARINGS OF ALL TYPES**

496, Sri Sangaraja Mawatha,
Colombo 12.

52, Armour Street,
(Sri Sumanatissa Mawatha)
Colombo 12.

Tel. Off : 447728, 335736, 446916, 446943
Fax : 447728

SKF

**Distributor**
Airline Traders

# எமது கிளைச் சங்கம் வளர்ந்து வந்த வரலாறு

- வே. விமலராஜா. சட்டத்தரணி. ஓய்வுபெற்ற தொழில் நீதிமன்ற நீதிபதி.
விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவர்

கரவெட்டி, விக்னேஸ்வராவின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக மிகவும் சிறப்பாக இயங்கி வந்து 1983ம் ஆண்டு இனக்கலவரத்தால் சுக்குநூறாகி செயற்படாது இருந்தது. இந்தக்கிளை மீண்டும் உருவாகிய கதை பற்றி கூறுவது பொருத்தமாகும். 1992ம் ஆண்டு சித்திரை மாதம் எங்கள் பாடசாலையின் பழைய மாணவரும் புகழ்பெற்ற கணித ஆசிரியருமான K.V. கந்தையா ஆசிரியரின் மகனான V.K நடராஜா (இவரும் பழைய மாணவரே) வின் புத்திரியின் திருமணம் தெகிவளையில் நடைபெற்றது. இதற்கு பழைய மாணவர்கள் பலர் சமூகமளித்தனர். இத்திருமண வைபவத்தில் கல்லூரி அதிபரான காலஞ்சென்ற திரு. சிவபாதசுந்தரம் கொழும்புக்கிளை ஆரம்பிப்பது பற்றி பழைய மாணவர்களுடன் ஆலோசித்தார். பத்திரிகை ஆசிரியர்களாக கடமை புரியும் பழைய மாணவர்களின் உதவியோடு இதுபற்றி விளம்பரம் செய்தோம். இதைவிட எம்மில் சிலர் வீடு வீடாக பழைய மாணவர்களிடம் சென்று உற்சாகம் ஊட்டி 05.07.1992ல் முதல் கொழும்புக் கிளைக் கூட்டத்தை நடாத்தினோம். அண்மையில் எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் கல்லூரியின் பழைய மாணவரான சிவா அண்ணா பிரதம அதிதியாக இருந்தார். இக்கூட்டத்தில் சிவா அண்ணாவும் பிரபல தொழில் அதிபர் க. கனகசபையும் பேராசிரியர் சிவத்தம்பியும் காப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். நான் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன். தொடர்ந்து தலைவராக இன்றும் கடமை புரிகின்றேன். காலஞ்சென்ற திரு. S. பரமேஸ்வரன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்குப்பின் செயலாளராகப் பணியாற்றியவர் காலஞ்சென்ற கே. பாலகிருஷ்ணன் அவர்கள். இவரின்பின் பதவியேற்ற கே. கணேஸ் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

எங்கள் கொழும்புக் கிளையின் செயற்பாடுகளைக் கூறு முன்பு கல்லூரியின் வரலாறு, வளர்ச்சி, பழைய மாணவர்களின் சிறப்பு போன்ற முக்கிய விடயங்கள் குறித்து குறிப்பிட்ட விரும்புகின்றேன். எங்கள் கல்லூரி 1917ம் ஆண்டில் இராசவாசமுதலியார் சிற்றம்பலம் (சித்தமணியம்) என்பவரால் தாபிக்கப்பட்டது. 1920ம் ஆண்டு இராசவாசமுதலியார் சின்னத்தம்பி கல்லூரியின் முகாமையாளராக பொறுப்பேற்றார். 75 வருடங்கள் நிறைவுபெற்றதும் "பவளவிழா மலர்" ஒன்று வெளியாகியது. இம்மலர் தொடர்பான சகல கருமங்களிலும் எங்கள் கல்லூரியின் பழைய மாணவரும் ஆசிரியருமான திரு. A. சுப்பிரமணியம் (Artist Master) அயராது உழைத்தார்.

எங்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள் பல துறைகளிலும் இலங்கையில் மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலும் மிகவும் புகழுடன் வாழ்கின்றனர். இதையிட்டு



நாங்கள் பெருமை கொள்ள வேண்டும். பழைய மாணவர்களில் மூவர் பாராளுமன்ற உறுப்பினர்களாக கடமையாற்றினார்கள். திருவாளர்கள் பொன் கந்தையா, சிவசிதம்பரம், ஜெயக்கொடி ஆகியோரே இம்மூவராவர். பாராளுமன்றத்தில் அவர்கள் மிகவும் புகழுடன் செயற்பட்டனர். எங்கள் கல்லூரிக்கு பல வகைகளிலும் பழைய மாணவர்கள் உதவி புரிந்துள்ளனர். பிரபல தொழிலதிபர் க. கனகசபை கல்லூரிக்கு காணி பெற்றுக் கொடுத்தார், மைதான விரிவாக்கத்திற்காகவும் பவளவிழா மலருக்கும் பண உதவி செய்தார். அவசர தேவைகளுக்கு போகும் போதெல்லாம் உதவி

செய்தார். இவ்வருடம் புலமைப்பரிசில் நிதிக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுத்தார். காலஞ்சென்ற திரு. V. பாலசுப்பிரமணியம், பிரபல தொழிலதிபர், கல்லூரிக்கு நீர் விநியோக வசதிகளைச் செய்தார். அவரது பாரியாரான சாந்தியும் எங்களுக்கு உதவி புரிந்து வருகிறார். கட்டட நிபுணரான எங்கள் பழைய மாணவன் திரு. ந. வாகீசன் புலமைப்பரிசில் நிதிக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுத்துள்ளார். புலமைப்பரிசிலை ஆரம்பித்து ஓர் இலட்சம் ரூபாவை முதன்முதலாக 06.05.1994 இல் வழங்கியவர் எமது கொழும்புக் கிளை உபதலைவரான திரு. N. பாஸ்கரனே.



இனி, எங்கள் கொழும்புக் கிளை செய்த சில பணிகளைக் கூறுவது பொருத்தமாகும். பவளவிழா மலருக்கு பல வகைகளிலும் உதவினோம். விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் வடக்குப்புற மதில் கட்டுவதற்கும் ரூபா 74,000/- வழங்கினோம். இப்பணத்தை நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்கள் ஒருவர் 10,000 ரூபா வரை கொடுத்து சேர்த்தோம். "கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற கொள்கைக்கு இணங்க எங்கள் கிளை, கல்லூரி கேட்டவற்றை இயன்றவரை கொடுத்து உதவி வருகிறது.

தமிழ் ஆய்வுத்துறையில் நிகரற்ற புலமைச் சாதனைகளை கடந்த நான்கு பத்தாண்டுகளிற்கு மேலாக செய்தமைக்காக எங்கள் கல்லூரி பழைய மாணவரும் கொழும்புக் கிளை காப்பாளருமான பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கு தமிழ் நாடு அரசு 2000 ஆண்டிற்கான திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் விருதை வழங்கியது. இதற்காக பேராசிரியரைக் கௌரவித்து வரவேற்பு விழா ஒன்று கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் 03.02.2001ல் நடத்தினோம். இவ்விழாவில் பல பெரியார்கள் உரையாற்றினார்கள். இவ்விழாவில் கனதியான "கரவையூற்று" என்ற நூல் ஒன்றும் வெளியிட்டோம். இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பலர் பாராட்டினார்கள். இவ்விழா தொடர்பான செலவுகள் எல்லாம் எங்கள் கிளையினரின் முயற்சியால் சேர்க்கப்பட்டதாகும்.

எமது கிளைச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 31.10.2001 இல் நடைபெற்றபோது, சிறப்பு அம்சமாக "ஒழுக்கக்கல்வி" (Moral Education) என்ற ஆங்கில நூலை வெளியிட்டு வைத்தோம். இந்நூலில் எழுதியவர் எமது கல்லூரியின் பழைய மாணவரான கல்விமான் கலாநிதி ஏ. சின்னத்தம்பி அவர்கள். இந்நிகழ்வுக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தலைமைசகிக்க, கொழும்புப்பல்கலைக் கழக கல்வித்துறைப்பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் நூல்பற்றி நயவுரை வழங்கினார். பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள் சிவா அண்ணாவின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரையும், தமிழ் மக்களின் கல்வி மேம்பாடு குறித்து எமது சிந்தனைகளைக் கிளர்ந்தெழ வைக்கும் விடயங்கள் பற்றி இந்நினைவு மலருக்கு எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையும், அவரது கல்வி சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன. கேட்ட போதெல்லாம் மறுக்காது உதவி வரும் அவருக்கு எமது நன்றிகள். எங்கள் கொழும்புக் கிளையின் காப்பாளராக கிளை ஆரம்ப காலத்திலிருந்து சேவை புரிந்த சிவா அண்ணா உடல் நலம் குன்றி சென்னையில் சில வருடங்கள் இருந்து இலங்கை திரும்பி வந்து எங்களுக்கு தொடர்ந்தும் சேவை புரிய வேண்டும் என வாழ்த்தி அவருக்கு ஒரு வரவேற்பு விழாவை 16.02.2002ல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் எங்கள் கிளை நடத்தியது. இவ்விழாவிற்கு பலர் திரண்டு வந்தனர். இதுவே அவர் கலந்து கொண்ட இறுதிப் பொது வைபவமாகும். அவருக்கு நாங்கள் கொடுத்த "பிரியாவிடை" இது எனலாம். கரவெட்டியில் நடந்த

இவரின் இறுதிக் கிரியைகளுக்காக செலவிட்ட தொகையில் ஒரு பகுதியை நாம் ஏற்றுக் கொண்டோம். 20.02.2002 எங்கள் சிவா அண்ணாவின் 79வது பிறந்த தினத்தன்று கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று நடத்தினோம். இதைவிட "சாகாவரம் பெற்ற சான்றோன்" என்ற தலைப்பில் அமரர். எம். சிவாவின் நினைவு மலர் வெளியிட்டோம். இந்தக் கூட்டத்தில் பல்வேறு துறைகளிலும் பிரபல்யமடைந்தவர்கள் உரையாற்றினார்கள்.



எங்கள் கிளையின் பத்தாண்டு நிறைவு தொடர்பாக 10.08.2002ல் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் ஓர் விழாவை நடாத்தி "இராமாயணம்" என்ற நாட்டிய நாடகத்தை இன்று மேடையேற்றுகிறோம். திருமதி கார்த்திகா கணேசர் படைப்பில் உருவாகியது இந்நாட்டிய நாடகம். திருமதி உஷா சிற்றம்பலநாதன் இந்த நாடகத்தின் நெறியாள்கையாளர். திரு சிற்றம்பலநாதன் எங்கள் கொழும்புக் கிளை நிறைவேற்றுக்குழு அங்கத்தவராவர். இந்த நாட்டிய நாடகத்திற்கு அனுசரணை (Sponsorship) வழங்குபவர் எங்கள் கிளையின் நிறைவேற்றுக்குழு அங்கத்தவரில் ஒருவரான திரு. ந. வாகீசன் கட்டட நிபுணர். இந்த நாடகத்தை எங்களுக்கு அன்புக் கொடையாக தந்துதவிய திரு. சிற்றம்பலநாதனுக்கும் அனுசரணை செய்யும் திரு. வாகீசனுக்கும் நாம் கடமைப்பட்டவர்கள். பத்தாண்டு நிறைவு விழாவிற்குத் தேவையான அழைப்பிதழ்கள், மலர் போன்றவையெல்லாம் அச்சிட்டு உரியவாறு பங்களிப்புச் செய்து உதவி புரிபவர் எங்கள் கல்லூரியின் பழைய மாணவரான திரு. நடேசனின் மகனான சிவகுமாரன். அவருக்கும் எமது நன்றிகள்.

பத்தாண்டுகள் நிறைவேறி எங்கள் பணி தொடர்கின்றது. இதையிட்டு நாம் பெருமை அடைகிறோம். எங்களுக்கு பல வகைகளிலும் உதவி புரிந்த / புரிந்து வரும் அன்பர்களுக்கும் அயராது உழைக்கும் செயலாளரான திரு. வீ.ஏ திருஞானசுந்தரத்திற்கும் கடந்த பத்து வருடங்களாக எங்கள் உத்தியோக அலுவல்களைப் புரிவதற்கு இடவசதியளித்து வேறு வகைகளிலும் எந்நேரமும் உதவி புரியும் உபதலைவரான திரு.V. S. பொன்னம்பலத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். என்ன செய்வது எப்படிச் செய்வது என நாம் திணறும் வேளைகளில் "சரி நான் அதைச் செய்கிறேன்" என ஆறுதல் தந்த நிறைவேற்றுக்குழு அங்கத்தவரான பணிப்பாளர் திரு. P. பாலச்சந்திரனுக்கு நாம் கடமைப்பட்டவர்கள். எந்நேரமும் எந்தக் கருமத்திற்கும் முன் நின்று உதவிபுரியும் நிறைவேற்றுக்குழு அங்கத்தவரான ஒரே ஒரு பெண் திருமதி. எஸ். முருகானந்தன் (ஆசிரியை) அவர்களுக்கும் எமது நன்றிகள்.

புலமைப்பரிசில் நிதி மேலும் வளர பழைய மாணவர்கள் முன் வரவேண்டும். மேலும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர் பட்டியல் விசாலிக்க வேண்டும் எனவும் கூறி வாழ்க! வாழ்க! எங்கள் கொழும்புக் கிளை என வாழ்த்தி முடிக்கின்றேன்.

*Bless men when they revile you.*

மாந்தர் உன்னைத் தூற்றுமிடத்து
அவர்களை நீ போற்றி வாழ்த்துவாயாக.

*- The Inspired Alphabet, In the words of Vivekananda*
- சுவாமி விவேகானந்தரின் அருள் வாக்கு

*With Compliments from :*

# SINDARLLA

## BEAUTY FASHION

- Bridal Dressing
- Facial
- Wedding Cake
- Hair Styles



7-7/4, Ground Floor, Orchaad Building,
Galle Road, Colombo 06.
Tel : 074-514298
Hot : 077-316453

# ஆத்மாவின் ஆசிகள் !



எமது சங்கத்தின் காப்பாளராக இருந்து வந்த "சாகாவரம் பெற்ற சான்றோன்" அமரர் மு. சிவசிதம்பரம் அவர்கள் இன்றைய நிகழ்வில் பங்குபற்றவில்லையே என்ற சோகமான நிலையில் நின்று அவரை நினைத்துப்பார்க்கின்றோம். எமக்கு தோன்றாத்துணையாக விளங்கி வந்த அவர் 1992– இல் கொழும்பில் எமது கிளைச் சங்கம் அமைக்கப்பட்டபோது அதன் ஆரம்பக் கூட்டத்தில் பங்குபற்றி எம்மை மகிழ்வித்தார். 2000 இல் நடைபெற்ற எமது கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. அவர் அப்பொழுது தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றுவந்தார். அதனால் ஒரு வாழ்த்துச் செய்தியை அங்கிருந்து எமக்கு அனுப்பிவைத்தார். அச் செய்தி இது தான் :-

*"விக்னேஸ்வராக் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை ஆரம்பித்த கூட்டத்தில் 1992 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி நான் பங்குகொண்டேன். கொழும்புக் கிளைக் கூட்டங்கள் மட்டுமல்ல சகல கருமங்களிலும் நான் எப்பொழுதும் மிக அக்கறையுடன் பங்குகொண்டேன்.*

*இம்முறை கூட்டத்தில் பங்குகொள்ள முடியாத நிலையில் தூரத்தில் இருக்கின்றேன். எனது பணிவன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

*என்னை வளர்த்து உருவாக்கியது விக்னேவராக் கல்லூரியே. வாழ்நாளில் நான் சாதித்தது உண்டென்றால் அதன் பெருமை விக்னேஸ்வராவுக்கே.*


*விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தில் மந்திரியாக, பிரதம மந்திரியாக, சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இங்கு நான் கற்றுக் கொண்டவை பாராளுமன்ற அங்கத்தவனாகவும், உப சபாநாயகராகவும், இலங்கைப் பாராளுமன்றத்தில் கடமையாற்றிய வேளையில் எனக்கு எவ்வளவோ உதவியாக இருந்தன. விக்னேஸ்வராவை நான் என்றும் மறக்கமாட்டேன். அது எனது மனதில் புதைந்துள்ளது. வாழ்க விக்னேஸ்வரா, வளர்க விக்னேஸ்வரா என முழுமையாக வாழ்த்துகிறேன்......"*

அவர் அன்று எழுதிய இக்கடிதம் இன்று கூட மிகப் பொருத்தமாக அமைந்துவிட்டது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. எம்மைப் பிரிந்து, திருப்பிவராத இடத்துக்குச் சென்றுவிட்ட அவர் நினைவாக இக்கடிதத்தை இங்கு பிரசுரிக்கின்றோம். இந்த மண்டபத்திலே அவர் உருவமாக இல்லாவிட்டாலும், அருவமாகத் தோன்றி மண்டபம் நிறைந்து எங்கும் வியாபித்து நின்று தமது நல்வாழ்த்துக்களை வழங்குவார் என்பது எமது அசையாத நம்பிக்கை. விக்னேஸ்வராவையும் சிவசிதம்பரம் அவர்களையும் யாருமே பிரித்துப் பார்க்க முடியாது. அந்த விக்னேஸ்வராவின் பொருட்டு அவர் விட்டுச் சென்ற பணியினை, அதன் மேம்பாட்டிற்கான அவர்தம் அபிலாஷைகளை எமது சங்கம் சிரமேற்கொண்டு எமது பங்குடன் சேர்த்து அவர் விட்டுச் சென்ற அதே இடத்திலிருந்து மிகுந்த செயலூக்கத்துடன் கருமமாற்றுவது அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகக் கருதுகின்றோம்.

- விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்கள்

*With Compliments from :*

# D.G.R. Chilaw Prawns Co. (Pvt) Ltd.



Aluthwatte Road,

Chilaw.

# வடமராட்சியின் மணம் பரப்பும் விக்னேஸ்வரா!

- பேராசிரியர் கா. சிவத்தம்பி

விக்னேஸ்வராவின் வரலாறு அது வடமராட்சியில் வகித்துவரும் பாகம் மிக முக்கியமானது. விக்னேஸ்வரா கரவெட்டியை மட்டுமல்லாது அதனைச் சூழவுள்ள வடமராட்சிக்குள் வாழும் பல இந்து சைவ மாணவர்களுக்கு மையப் பாடசாலையாக இருந்து வருகிறது. சூழவுள்ள கிராமங்களில் வாழ்கின்ற பலர் விக்னேஸ்வராவில் படித்தவர்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் விக்கினேஸ்வரா தன் கடமையை மிகச் சிறப்பாக செய்துள்ளது. இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஒருமுறை இலங்கை விஜயம் மேற்கொண்ட போது விக்னேஸ்வராக் கல்லூரியில் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. அந்த வரவேற்பில் வரவேற்புப் பத்திரத்தை கே.சி. நடராஜா வாசித்தளித்தபோது அதில் அவர் "We Shall Not Falter" என்று கூறினார். நேரு உடனே திருப்பி அவரிடம் கேட்டார், நீங்கள் சொன்னதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பீர்களா? உடனே சாதுரியம் மிக்கவரான நடராஜா "We Shall Never Falter" என்று சொன்னதாக நாம் அறிகின்றோம். உண்மையில் விக்னேஸ்வராவின் தாரக மந்திரமாக இருக்கக் கூடிய சொற்றொடர் அது என்பதுதான் எனது கருத்தாகும். எங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதிலிருந்து தவறமாட்டோம் என்பதை விட எங்களிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுவதைச் செய்யாமல் விடமாட்டோம் என்பதே உயர்வானது என்பதே எனது நிலைப்பாடாகும்.



ஒரு காலனித்துவ சூழலில் நடந்த படிப்புகள் காரணமாகவும் அந்தக் கிராமத்துக்கு பெரும் அபிலாசைகள் அந்தக்காலத்தில் இல்லாமை காரணமாகவும் அரசாங்க உத்தியோகங்களுக்குச் செல்வது மிகச்சிறப்பானதொரு சேவையாகக் கருதப்பட்ட சூழலில் விக்னேஸ்வரா உண்மையில் எங்களுடைய இந்தக் கிராமத்துக்கும் சூழவுள்ள கிராமங்களுக்கும் அரச உத்தியோகங்களைக் காண்பதற்கான வாய்க்காலாக அமைந்தது.

நான் கொழும்பு சாஹிராவில் படித்தபோது 1949, 50–களில் வை.எம்.சி.ஏ.யில் நடந்த கூட்டத்தில் முதலில் பங்குபற்றிய போது அங்கு வந்திருந்தவர்களில் எல்லோரும் மிகப் பெரிய அரச உத்தியோகத்தர்களாகவே காணப்பட்டனர். இதனை ஏன் சொல்கிறேன் என்றால் கரவெட்டியினதும், வடமராட்சியினதும் நவீன மயமாக்கத்துக்கு விக்கினேஸ்வராவின் பங்களிப்பு மிக உயர்வானதாகும். இதனை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

இந்த மாணவர்களூடாக இந்தக் கிராமமும் அதனைச் சூழவுள்ள கிராமங்களும் நவீனமயமாக்கப்பட்டுள்ளமை உண்மையிலேயே மன நிறைவைத் தருகின்றது. பல குடும்பங்கள் தங்களுடைய நிலைகளை வளர்த்து உயர்த்திக்கொள்ள இது தளமாக அமைந்துள்ளது.

விக்னேஸ்வராவின் கல்வி அமைப்பு எமக்குத் துணையாக அமைந்துள்ளது. எமது சமுதாயத்தில் கல்வியால் மட்டுமே உயர முடியும் என்ற கோட்பாடு நிறையவே இருக்கின்றதை நாம் உணர்ந்துள்ளோம். அதற்கேற்ற சூழல் விக்னேஸ்வராவில் நிறையவே காணக்கூடியதாக இருந்தது. இன்றும் இருக்கின்றது.

அன்று தமிழ் நாடு, கேரளம் ஆகிய இடங்களில் இருந்து வந்த ஆசிரியர்கள் சூழவுள்ள கிராமங்களிலிருந்து வந்த ஆசிரியர்கள், உள்ளூர் ஆசிரியர்கள் என்று மூன்று வகையினர் அங்கு

கற்பித்தனர். அக்கல்லூரி முற்றிலும் கரவெட்டியாக இருக்கவுமில்லை அதே நேரம் வடமராட்சியின் மணத்தை அது இழக்கவுமில்லை.

இன்றைய எங்களுடைய ஆளுமை விருத்திகளுக்கு எமக்கு அறிவூட்டிய ஆசிரியர்களின் பங்கு மகத்தானது, முக்கியமானது. அவர்கள்தான் மண்ணிலிருந்து எங்களை மனிதர்களாக்கியவர்கள் என்பதை நாம் மறுக்கவே முடியாது. கரவெட்டியின் வரலாறும் கரவெட்டியை சூழவுள்ள கிராமங்களின் வரலாறும் எழுதப்பட வேண்டும். இதனை நான் பேச்சுக்காக முன்வைப்பதாக எண்ணிவிட வேண்டாம். யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றிலும், யாழ்ப்பாண வரலாற்றிலும் மிகுந்த அக்கறை கொண்டவன், ஆராய்ச்சி செய்தவன் என்ற வகையில்தான் இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றேன். எமது விக்னேஸ்வராக் கலா பீடத்தை மையமாகக்கொண்டு கரவெட்டியின் வரலாற்றையும், வடமராட்சி வலராற்றையும் பதிக்க வேண்டும். அதிலும் கரவெட்டி வரலாறு எமக்கு மிக முக்கியமானதாகும்.

ஒட்டுமொத்தமாக யாழ்ப்பாண வரலாற்றை எழுதும்போது கரவெட்டி, வடமராட்சி வரலாறுப் பதிவுகள் இல்லாது போனால் வடமராட்சி வரலாறு மறக்கப்பட்டதொன்றாகிவிடும். இதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கட்டாயமாக உள்ளூர் வரலாறு எழுதப்பட்டேயாக வேண்டும். இது எனது நீண்டகால இலட்சியமாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 2000 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்றபோது நிகழ்ந்தப்பட்ட உரையிலிருந்து.........)

## மன ஒருமை

அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு முறைதான் உண்டு. அது தான் மனத்தை ஒரு முகப்படுத்தல் என்பது. கல்வியின் அடிப்படையான இலட்சியமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். சாதாரண மனிதனிலிருந்து சகல சித்திகளையும் பெற்ற யோகிவரை, எல்லோரும் தங்கள் வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். இரசாயன சாலையில் வேலைசெய்யும் சாஸ்திரி தன் மனோசக்தி முழுவதையும் ஒருமுகப்படுத்தி பிரகிருதிவஸ்துக்களின் மேல் செலுத்துகிறான். அப்பொழுது அவனுக்கு இப் பிரகிருதிவஸ்துக்களின் உண்மைத் தத்துவம் புலனாகி உறிவு உண்டாகிறது. வானசாஸ்திரி தன் மனோசக்தியை ஒருமுகப்படுத்தித் தூர திருஷ்டிக் கண்ணாடியின் மூலம் தான் ஆராய விரும்பும் கிரகங்களின் மீது செலுத்துகிறான். அப்பொழுது நட்சத்திரங்களும் சூரிய மண்டலங்களும் முன்வந்து அவனுக்கு தங்கள் இரகசியங்களை வெளிப்படுத்துகின்றன. கல்லூரிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களும், கல்வி பயிலும் மாணவர்களும் இன்னும் அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடுவோர் அனைவரும் இவ்விதம் தங்கள் மனத்தை ஒருமுகப்படுத்துவதன் மூலமே தங்கள் அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளுகின்றனர்.

– சுவாமி விவேகானந்தர்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டுக் கருத்தரங்கு நிகழ்வையொட்டிப் பிரசுரித்த வெளியீட்டிலிருந்து (31.07.97).

# ஆளுமைமிக்க பெண்களை உருவாக்கிய விக்னேஸ்வரா!

சூரியன் காலையில் உதிப்பதும் மாலையில் மறைவதும் வழமையான ஒரு நிகழ்வே. ஆயினும், இவ் இரு நிகழ்வுகளுக்கும் இடையில் எத்தனையோ சம்பவங்கள் எமது வாழ்வில் இடம் பெறுகின்றன. மனித வாழ்விற்கே உரிய பண்போடு உலா வந்தவர்கள் எம் முன்னோர்கள். பல்வேறு விழுமியங்களை அவர்கள் வகுத்திருந்தார்கள்.

இவ்வாறாக கலை கலாசாரத்தோடு சேர்ந்த பெண்களின் கல்வி முறைதான் எமது விக்னேஸ்வராக் கல்லூரியின் சிறப்பு. இச்சிறப்பின் முக்கியத்துவம் உயர் வகுப்பு மாணவிகள் முழுப் பாவாடை சட்டை அணிவது ஒரு வழமையான நிகழ்வாகக் காணப்பட்டது. தினமும் ஆலய வழிபாடும் கல்லூரியிலே நடைபெறுவது வழமை. எனவே எமது சைவப் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்த கல்லூரி என்ற பெருமை விக்னேஸ்வராவிற்கு உண்டு.

எமது கல்லூரி பச்சைப் பசேலெனக் காட்சி அளிக்கும் வயல் வெளிக்கு முன்பாகவே ஏறு நடைபோடுகின்றது. இக் கல்லூரியிலே கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் இலங்கையில் மட்டுமல்ல உலகின் சகல பாகங்களிலும் ஏதோ ஒரு துறையிலே மிளிர்ந்து காணப்படுவதால் தன்னிகரில்லாக் கல்லூரியாகத் திகழ்கின்றது.

இனி, விக்னேஸ்வரா பெண்களின் கல்விக்கு எவ்வாறு உதவியது என்று பார்ப்போம். ஆசிரியர்கள் என்றால் ஞானவிளக்குகள் என்பது கருத்து. காரணம் எரிந்து கொண்டு இருக்கும் விளக்கிற்கு எண்ணெய் ஊற்றினால் எவ்வாறு ஒளிருமோ அதே போல் மாணவர்களின் கல்விக் கண்ணை ஒளிர வைப்பவர்கள். இவ்வாறு சிறப்புத்தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் தூர இடங்களில் இருந்து வந்து அதிக சிரத்தையுடன் கல்வியைக் கற்பித்தார்கள். இது இக்கல்லூரிக்குக் கிடைத்த ஒரு கொடையாகும். இவ்வாறான கற்பித்தல் மூலம் மாணவர்கள் பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றுக்கொண்டனர்.

சுருங்கக் கூறின், கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் இன்றும் நாம் அறிந்த வகையில் சிறப்புற்றே நடைபெறுகின்றன எனத் திட்ட வட்டமாகக் கூறலாம்.

பெண்களைப் பொறுத்தவரையில் பாரதியார் கூறியது போல ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்லர். பெண்கள் என்பதையும் இக்கல்லூரியின் ஒவ்வொரு துறையிலும் நான் எனது கண் ஊடாகவே பார்க்கக்கூடியதாக இருந்தது.

மெய்வல்லுனர் போட்டிகளைப் பொறுத்த வரையிலே சகல விளையாட்டுக்களிலும் பெண்கள் பங்கு பற்றி திறமையான பரிசில்களையும் தட்டிக்கொண்டனர். உடுப்பிட்டி வட்டாரத்திலே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிகளிலே சான்றிதழ்களைப் பெற்றதுடன் சிறந்த வீராங்கனைகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாகும்.

சங்ககாலத்தில் இருந்து வளர்ச்சி பெற்ற இசை, நடனம் போன்ற கலைகளில் நாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை இக்கல்லூரியில் கல்வி கற்ற பெண் பிள்ளைகள் பாடசாலையில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கலை விழாக்களிலும் அரங்கேறச் செய்தமை கல்லூரியின் இயல், இசை, நடனம் ஆகிய முத்தமிழ் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டுகின்றது.

வனைதல், பன்னவேலை செய்தல் வரைதல் என்பது எல்லோருக்கும் கைவந்த கலையல்ல. மன அமைதியும் பொறுமையும் உள்ள ஒருவரால் மட்டுமே இவற்றைச் செய்ய முடியும். இப்பயிற்சிகளுக்கு

தனித்தனியாக அமைக்கப்பட்ட அறைகளிலே ஆண் பெண் பாகுபாடு இன்றி எல்லோருக்கும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் பயிற்ச்சியளிக்கப்பட்டது. ஆகையால் இம்மூன்று துறையிலும் இக்கல்லூரி மாணவர்கள் மிளிர்ந்து காணப்பட்டனர். இவ்வாறு பொறுமையுடன் இத்துறைகளில் மாணவர்கள் பயிற்றப்பட்டதனால் இவர்கள் தமது வாழ்க்கையிலும் இவற்றைப் பிரயோகித்து தம் இல்லங்களை அலங்கரிப்பதற்கு உதவியாக இருக்கிறது என்று கூறமுடியும்.

இவ்வாறு எமது கல்லூரி கல்வியுடன் மட்டும் நின்று விடாது கல்வியுடன் இணைந்த சகல துறைகளிலும் முன்னேறி சுடச்சுட மிளிரும் பொன்போல விளங்கி வருகின்றது. கிராமப்புறச் சூழலிலே விளங்கிய கல்லூரியாகத் திகழ்ந்த போதிலும் இதன் வளர்ச்சி நகரப்புறக் கல்லூரிகளின் வளர்ச்சிக்கு இணையாகவே விளங்கியது. இக்கல்லூரியிலே கல்வி கற்றுப் பட்டம் பெற்ற பெண்கள் ஏனைய துறைகளிலே தேர்ச்சி பெற்ற பெண்கள் எல்லோருமே ஒரு ஆளுமை மிக்கவர்களாகத் திகழ்வதை நாம் இன்று பார்க்கக் கூடியதாக உள்ளது. மாணவர்களுடைய கற்றல் நடவடிக்கைகளுடன் ஒழுக்கம், கடமையுணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சகல பண்புகளையும் எமக்கு வளர்த்து சிறந்த ஆற்றல் உள்ளவர்களாகவும் ஆளுமை மிக்கவர்களாகவும் திகழச் செய்தமையை நாங்கள் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இந்த வகையிலே ஆரம்பக்கல்வி முதல் உயர்தரக்கல்வி வரை இக் கல்லூரியிலே கல்வி கற்ற மாணவி என்ற வகையில் நான் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் இக் கல்லூரியும் இக்கல்லூரியில் எனக்கு வழிகாட்டிகளாக இருந்த அதிபர் ஆசிரியர்களுமே என்பதில் நான் பெருமை அடைகிறேன்.

திருமதி. ச. முருகானந்தன்
ஆசிரியை,
இரத்மலானை,
கொழும்பு இந்துக்கல்லூரி
(செயற்குழு உறுப்பினர்)

## நம்பிக்கை

மனிதத் துணை அனைத்தையும்விட இறைவன் எல்லையற்ற பெருமையை உடையவன் அல்லவா? தூய்மை பெறு, இறைவனிடம் நம்பிக்கை கொள். அவரையே எப்போதும் சார்ந்திரு: அப்போது நன்னெறியில் செல்வாய்: எதனாலும் உன்னை வெல்ல முடியாது.

தம்மிடம் நம்பிக்கை கொள்பவர்களே பெருமையும் ஆற்றலும் எய்தியுள்ளனர் – எந்த நாட்டு வரலாற்றிலும் என்றைக்கும் காணப்படுவது இதுவே.

விருப்பப்படுவது ஒன்றாலேயே ஒருவர் பெருமை பெற இயலாது: இறைவன் யாரை உயர்த்துவானோ அவனே உயர்வான், யாரைத் தாழ்த்துவானோ அவன் தாழ்வான் என்பதை ஒரு காணப்பொழுதாவது உணர்ந்தால் போதும், துயரம் அனைத்தும் முடிவடைந்துவிடும்.

லட்சியத்தில் ஆழ்ந்து ஈடுபட வேண்டும் – ஒரு கணம் ஈடுபடுவதல்ல: அமைதியாகவும் குலையாத முயற்சியோடும் நிலையாகவும் ஈடுபட வேண்டும். சாதகப் பறவை இடிமின்னல்களுக்கு இடையிலும், ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும். அது மழை நீரைத் தவிர வேறு நீரைக் குடிக்காது. அத்தகைய ஈடுபாடே தேவையானது.

கடவுளிடம் நம்பிக்கையற்றவனை நாத்திகன் என்று பண்டைய மதங்கள் கூறின. ஆனால் புதிய மதமோ தன்னிடம் நம்பிக்கை அற்றவனை நாத்திகன் என்கிறது.

முன்னேற்றம் வேண்டுமானால் முதலில் நம்மிடமும் பின்னர் இறைவனிடமும் நம்பிக்கை வைக்க வேண்டும்.

– சுவாமி விவேகானந்தர்

# யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை

## - செயற்குழு 2002 -



முன்வரிசை : இடமிருந்து வலம் : திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் (செயலாளர்), திருமதி. ச. முருகானந்தன், திரு. வே. விமலராஜா (தலைவர்), திரு. எஸ். வி. எஸ். பொன்னம்பலம் (உப-தலைவர்), திரு. பி. பாலச்சந்திரன், திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை (பொருளாளர்).

பின்வரிசை : இடமிருந்து வலம் : திரு. எஸ். சிற்றம்பலநாதன், திரு. வி. திருச்செல்வம், திரு. எஸ். கணேசராஜா, திரு. கே. கணேஸ், திரு. வி. கந்தசாமி, திரு. பி. பார்த்திபன், திரு. எஸ். மகாலிங்கம், திரு. வி. தில்லைநாதன்.

படத்தில் இடம் பெறாதோர் : திரு. ரி. பாஸ்கரன் (உப தலைவர்), திரு. என். வாகீசன், திரு. வி. கந்தசாமி, திரு. எஸ். விவேகானந்தன்.

*With Compliments From :*




# Sultana
# Bakery & Hotel


13 & 17, Main Street,
Kochchikade.
Tel : 031-77263 & 77454

*With Best Compliments from :-*

பாலர்களுக்கான நீதிக் கதைகள், குழந்தைகளுக்கான அறிவுக் கதைகள், சிறுவர்களுக்கான கதை மலர்கள், மாணவர்களுக்கான அறிவுக் கதைகள், பாலர்களுக்கான பலவர்ண நூல்கள், தரம் 1 தொடக்கம் 11 வரைக்குமான சைவ நெறி செயல் நூல்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் ஆன்மீக நூல்களும், அனைத்துப் பாடசாலை உபகரணங்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள........




## அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்



320, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

தொலைபேசி இல. 334004

*With Best Compliments from :-*



## SAI EDUCATIONAL PUBLICATION

**Publisher, Exporter and Importer of Books, Magazines, Periodicals and Stationaries**

155/2, Canal Road, Colombo 6,

Sri Lanka.

T.P : 592707

# ஆடல் வடிவில் புதிய யுக்திகள்

- சற்சொரூபவதி நாதன்

யாழ் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் பத்தாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, திருமதி உஷா சிற்றம்பலநாதனின் நெறியாள்கையில் "இராமாயணம்" நாட்டிய நாடகம் மேடை ஏற்றப்படுவதையிட்டு உவகை அடைகிறேன். நாட்டியக் கலை உலகில் விருட்சமாக நின்று ஆக்கக் கலைஞராக எமது நாட்டின் புகழை சென்னை, அவுஸ்திரேலியா போன்ற பிறநாடுகளிலும் நிலைநாட்டிவரும் என் மதிப்புக்குரிய சினேகிதி கார்த்திகா கணேசரின் சகோதரி, உஷா மேடையேற்றும் "இராமாயணம்" முதன் முதலில் 1974 இல் கார்த்திகாவினால் ஈழத்துக் கலையுலகில் புதுமைப் படைப்பாக பலரின் பாராட்டையும் பெற்றதாகும். அதன் மெருகு குன்றாமல் இன்றும் உஷா அதனை மேடையேற்றி வருகிறார்.

நாட்டிய கலாநிதி திருமதி கார்த்திகா கணேசர் பத்மஸ்ரீ வழுவூர் இராமையாபிள்ளை அவர்களின் சிஷ்யை, ஒரு கால கட்டத்தில் சிறந்த நாட்டிய நாடகங்களை அவர் உருவாக்கித் தந்தார். "உதயம்" "சக்திக் கனல்" என்ற இவரது நாட்டிய நாடகங்கள், பாடல்கள் சொற்கள் இல்லாமல் முற்று முழுதாக இசையுடன் புதுமையாக அமைக்கப்பட்டன. 1983ற்குப் பின் தமிழ் நாட்டில் நடனம் ஆடியும், பயிற்றுவித்தும் புகழ்பெற்றார். தற்போது கணவர் ராஜா கணேசருடனும், பொறியியலாளராக கடமையாற்றும் மகன் அமிழ்தன், மருமகள் கீதா (பிரபல பாடகர் பரம்தில்லைராஜாவின் மகள்) ஆகியோருடனும் சிட்னியில் நடன வகுப்புக்களை நடத்தி கலைத் தொண்டாற்றுகிறார். நாட்டியம் சம்பந்தமான பல நூல்களின் ஆசிரியை "தமிழர் வளர்த்த ஆடற்கலைகள்", "காலந்தோறும் நாட்டியக் கலை", "இந்திய நாட்டியத்தின் திராவிட மரபு", "நாட்டியக் கடலில் புதிய மரபுகள்" - இவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இவரது தங்கையான உஷா, அக்காவிடம் பயிற்சி பெறுவதற்கு முன்னதாக அவரது சித்தியான திருமதி ஞானமணி செல்லையாவிடம் நடனம் பயின்றவர். நட்டுவாங்கம் செய்வதில் பாண்டித்தியம் பெற்றார். சகோதரியின் நடனங்களுக்கு நட்டுவாங்கம் செய்ததுடன், அவரது நாட்டிய நாடகங்களிலும் பங்கேற்றவர். கண்டிய நடனமும் பயின்றிருப்பதால் இவரது நாடகங்களில் ஆண் பாத்திரங்கள், கண்டிய நடன அடவுகளைப் பிரயோகித்து எம்மை அசத்தி விடுகின்றனர். நாட்டிய வடிவங்களுக்கான ஆடை வடிவமைப்பில் முக்கிய கவனமும், கலைச்செறிவும் காண்பிக்கும் இவர், நடனம் பயிற்றுவிப்பதுடன் சற்று வித்தியாசமான முறையில் புதிய யுக்திகளை கார்த்திகா போன்று, கையாண்டு நாட்டிய நாடகங்களையும் மேடையேற்றி வருகிறார். இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற வாள் நடனம், சாந்த கிளேயர் மாணவியரின் திருமண நடனம், சென்ற் லோரன்ஸ் படைப்பிரிவினருக்கான சிறப்பு நடனம் என்பன மிகுந்த பாராட்டைப் பெற்றுள்ளன.

இராமகிருஷ்ணமிஷ மண்டபத்தில் 10.08.2002 இல் இவரது நெறியாள்கையில் மேடையேறும் இராமாயணம் மூலம் பெறப்படும் உதவு தொகைகள் கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படவிருக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் உஷாவிற்கும் அவரது மாணவ மாணவியருக்கும் நல்லாசிகளைத் தெரிவிப்பதுடன் இராமாயண நாட்டிய நாடகம் பற்றி கார்த்திகா "காலந்தோறும் நாட்டியக்கலை" என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ள பகுதியையும் உங்கள் சிந்தைக்கு விருந்தாக்க விளைகிறேன்:-

".............இராமாயண நாட்டிய நாடகம், உண்மையில் சகல கலைகளும் பொருந்திய நாடகமாக மிளிர்வதற்கு, யான் கையாண்ட முக்கிய பரிசோதனைகள் வருமாறு:-

நாடகத்துக்கு வாசீகாபிநயம் - அதாவது பாத்திரங்கள் பேசும் வசனங்கள் மிகமுக்கியம். நாட்டிய நாடகங்களில் இவ்வசனங்கள் பாடல்களாக அமைவது முறை. எமது பண்டைய கூத்துக்களில் இப்பாடல்களை கூத்தினை ஆடும் நடிகர்களே பாடி நடிப்பர். நாட்டிய நாடகங்களில் கூட்டியத்தில் உள்ள பாடகர் பாடுவது வழக்கம். இதுகாறும் நடைபெற்ற நாட்டிய நாடகங்களில், பரத நாட்டியப் பதங்கள் போல் கீர்த்தனங்களாக, இலக்கியத் தமிழில் எழுதப்பட்டன. இதைவிடுத்து பரதர் கூறியது போல, சாதாரண மக்கள்

பேசும் தமிழில் எழுதும் போது, பாத்திரங்களின் பாவங்களைப் புலப்படுத்துவதற்கும் ரசத்தினை அச்சொட்டாக வெளிக்கொணர்வதற்கும உதவும் என எண்ணினேன். எனது கோரிக்கையை உணர்ந்து ஈழத்து இரத்தினம் அவர்கள் சாதாரண பேச்சுத் தமிழில் பாடல்களையாக்கி உதவினார். ஒரு சில பாடல்களை திரு. மௌனகுரு அவர்களும் வடமோடிக் கூத்து மரபில் எளிமையான ஆனால், வலுவுள்ள சந்தத்திற்கு எழுதியுதவினார். ஈழத்து இரத்தினத்தின் பாடல்கள், பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் பகுதிகள் அடங்கிய கீர்த்தனை ரூபத்தில் அமையாது, எளிமையான, ஆனால், அழகிய கவிதைகளாக உருப்பெற்றன. இப் பாடல்கள் யாவும் பாத்திரத்தின் பாவத்திற்கும் நாடகச் சுவைக்கும் ஏற்ற கர்நாடக இராகங்களில் அமைக்கப்பட்டன.

இரண்டாவதாக, இயன்றவரையில், தகுந்த இசைக்கும் தாள லயத்திற்கும் உட்பட்ட ஆடல் வடிவிலேயே நாடகத்தைக் கொண்டு செல்ல முயற்சித்தேன். உதாரணமாக, இராம லக்குமணர் விஸ்வாமித்திரருடன் யாகம் காப்பதற்கு செல்லல், அங்கு அரக்கர்களை அழித்தல் போன்ற காட்சிகளும், மற்றும் விஸ்வாமித்திரர் அகில உலகமும் நடுங்கும்படி கோபாவேசப்படுதல் என்பவை அவற்றிற்கு ஏற்ற ஆடல் வடிவங்களாகக் காட்டப்பட்டன. மூன்றாவதாக உணர்ச்சிகளையும், சுவைகளையும் துலாம்பரமாகக் காட்டும் வகையில் பல்வகையான ஆடல் முறைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. பரத நாட்டியம் என இன்று பொதுவாகக் கூறப்படுவதும், சிருங்கார ரசத்தையே சுவையாகக் கொண்டதும், யான் சிறப்பாகத் தமிழ் நாட்டில் கற்றுக்கொண்டதுமான லஸ்ய ஆட்டத்தினை மட்டும் நம்பியிருந்தால் இராமாயணத்தை வெற்றிகரமான நாடகமாக நான் மேடையேற்றியிருக்க முடியாது. உதாரணமாக, இறுதிக் காட்சியான இராம – இராவண யுத்தம் வடமோடி ஆடலைத் தழுவி ஆக்கப்பட்டது. எனது இராமாயண நாடகத்தின் சிறப்பம்சமாகக் கருதப்படும் ஈழத்து நாட்டுக் கூத்து வடிவங்களைப் பேணிக் காப்பதற்கு முன்னின்று உழைத்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரான பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பேராதனை வளாகத்தில் தயாரித்த கூத்துக்களில் ஆடிய நாட்டுக்கூத்துக் கலைஞரான மௌனகுரு அவர்களின் உதவியுடன் வடமோடி ஆடல் முறையை எனது ஆடல் முறைகளுடன் இணைக்க முடிந்தது..............”

## கல்வி என்பது யாது?

மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்வத்தை வெளிப்படுத்துவதே கல்வி யெனப்படும். அறிவு மனிதனிடத்து இயல்பாக அமைந்திருப்பது. அது புறத்தேயிருந்து வருவதொன்றன்று. அது அகத்தே அமைந்திருப்பது. ஒரு மனிதன் 'அறிகிறான்'' என்று சொல்லுகிறோம். அதை மனோதத்துவ சாஸ்திரத்திற்கேற்ற மொழியில் சொல்லின் அதைக்கண்டு கொள்கிறான் அல்லது அறியாமைத் திரையை நீக்குகிறான் என்று சொல்லுதல் வேண்டும். ஆராய்ந்து பார்க்குமிடத்து எல்லையற்ற அறிவுக்களஞ்சியமாகிய ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதல் 'கற்றல்'' என்பதன் பொருளாகும். தத்துவ சாஸ்திரியாகிய நியூட்டன் உலகக் கவர்ச்சி நியதியைக் கண்டு பிடித்தார் என்கிறோம். அது அவர் வருவாரென்று எங்காவது மூலையில் காத்துக்கொண்டிருந்ததா? இல்லை, அது அவர் உள்ளத்திலேயே யிருந்தது. காலம் வரவும் அவர் அதைக்கண்டு வெளியாக்கினார். உலகு இது காறும் பெற்ற அறிவு முழுதும் மனத்திலிருந்து வந்தது. சராசரத்திலுள்ள அறிவு அனைத்தும் பொதித்த எல்லையற்ற நூற்களஞ்சியம் நமது உள்ளத்தே இருக்கிறது. ஆதலால் நம்மால் கற்கப்படும் பொருள் நமது உள்ளமே புறத்தேயுள்ளள பிரபஞ்சம். நாம் நமது உள்ளத்தை ஆராய ஒரு வெறும் தூண்டுகோல். நம் உள்ளத்தை நாம் கற்றற்கு அவசியமான குறிப்பையும், சந்தர்ப்பத்தையும் கொடுக்கும் கருவியே அது. பழம் விழுந்த குறிப்பினைக் கண்ட நியூட்டன், அதன் காரணத்தை ஆராயத் தமது உள்ளத்தை நோக்கினார். முன்பு கண்டு பிடித்த முடிவுகளோடு ஒரு புது முடிவு புலப்பட்டது. அங்ஙனம் அவர் கண்ட முடிவினை நாம் உலகக் கவர்ச்சி நியதியெனக் கொள்ளுகிறோம். அவ்விதி பழத்திலோ அல்லது பூமியின் நடுவிலோ இருக்கவில்லை.

– சுவாமி விவேகானந்தர்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டுக் கருத்தரங்கு நிகழ்வையொட்டிப் பிரசுரித்த வெளியீட்டிலிருந்து (31.07.97).

# இராமாயணம் - நுழைவாயில்

பாரத புண்ணிய பூமியில் அயோத்தி மாநகரின் சக்கரவர்த்தியான தசரதமாமன்னருக்கு கோசலை, சுமித்திரை, கைகேயி எனும் மூன்று மனைவியர்கள். இவர்களில் மூத்தவரான கோசலை இராமனையும் கைகேயிக்கு பரதனும் சுமித்திரைக்கு இலக்குமணனும் சத்துருக்கனுமாக நான்கு குழந்தைகள் பிறந்தனர்.

வசிட்ட மாமுனிவரிடம் குருகுலவாசமிருந்து நால்வரும் கல்வி கலைகளைக் கற்றுத் தேறியபின் அரண்மனை திரும்பினர். தவசிரேட்டர்களான முனிவர்களின் யாகங்களை அசுரர்கள் அழித்து வந்தனர். அவர்களைக் கொன்றொழிக்க விசுவாமித்திர மாமுனிவர் இராம இலக்குமணன் இருவருடைய உதவியையும் நாடினார். அசுரகணங்களை வெற்றிகரமாக அழித்த இராமரையும் தம்பி இலக்குமணனையும் விசுவாமித்திரர் ஜனக நாட்டிற்கு அழைத்துச் சென்றார். போகும் வழியிலேயே இராமனுடைய கண்களும் ஜனகர் மகள் சீதையின் கண்களும் சந்திக்கின்றன. இருவரும் காதல் வசமாகின்றனர். சீதையின் சுயம்வரத்தில் இராமனுக்கே சீதை மாலை சூட்டுகிறாள். திருமணம் நிறைவேறுகிறது.

அயோத்தி திரும்பிய இராமனுக்கு முடிசூட்டு விழா நடாத்த தசரதர் ஏற்பாடு செய்கிறார். இக்கால கட்டத்தில் கைகேயியின் செவிலித்தாய் கூனி கைகேயியின் மனதைக் குழப்பி பரதனுக்கே முடிசூட்ட வேண்டுமென்று மன்னரைத் தூண்டும்படி சதி செய்கிறாள். ஏற்கனவே தசரதன் அளித்த மூன்று வரங்களைப் பயன்படுத்தி தசரதனிடம் பரதனை அரசனாக்கவும் இராமன் பதினான்காண்டுகள் வனவாசம் செல்லவும் தசரதனைச் சம்மதிக்க வைக்கிறாள். இந்தக் கவலை மன்னனின் உயிரைக் காவு கொள்கிறது.

இராமனுடன் மனைவி சீதையும் தம்பி இலக்குமணனும் கானகம் செல்கின்றனர். இராவணன் தங்கை சூர்ப்பனகை, இராமன் அல்லது இலக்குமணனை தன் மணாளனாக வரிக்க ஆசைப்படுகிறாள். இதனால் மானபங்கப்படுத்தப்படுகிறாள்.

தங்கைக்குத் தீங்கிழைத்த இராம இலக்குவனைப் பழிதீக்க இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று இலங்கை மாநகரில் அசோகவனத்தில் சிறைவைக்கிறான். சீதையை மீட்டு வர இராமன் திரட்டிய படையில் அனுமனின் தலைமையில் வானரப்படை திரள்கிறது.

சேது சமுத்திரத்தின் மீது வானரப்படைகள் அமைத்த கல்லணை மீது நடந்து இலங்கையை அடைந்த இராமர் இராவணனை வதம் செய்து சீதையை மீட்டு அயோத்திமாநகர் வருகிறார். வனவாசம் சென்ற தனது அண்ணன் இராமரின் பாதகைகளை அரியணையில் வைத்து பரதன் நாட்டை அதுவரை ஆண்டு வந்தான்.

இராமர் திரும்பியதும் பட்டாபிஷேகம் கோலாகலமாக நடைபெறுகிறது.

## பாகம் I

